30.08.2024

O.S.No.365/2014

வா.சா.1.திரு.பொன்னையா த.பெ.கருப்பன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு** விசாரணை

1. பிரதிவாதி எனது சொத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் இந்த வழக்கினை நான் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து எனக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் எங்கள் சகோதரர் நால்வருக்கிடையே பாகம் செய்து கொண்டதில் எனது பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்துதான் தாவாசொத்து ஆகும். எனது உடன்பிறந்தவர்கள் உலகன், சின்னையா, முத்தன் ஆகும். முத்துககனி என்ற ஒரு சகோதரியும் எனது உடன்பிறந்தவர் என்றால் சரிதான், அவர் இறந்து போய்விட்டார். நாங்கள் வாய்க்கரலாக பாகம்பிரித்துக் கொண்டதாக சொல்வதால் அந்த சமயத்தில முத்துக்கனி உயிருடன் இருந்தாரா என்றால் இல்லை. முத்துக்கனியின் வாரிசுதாரர்களுக்கு நாங்கள் வாய்க்கரால் பாகம் பிரித்துக் கொண்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். முத்துக்கனியின் வாரிசுதாரர்களுக்கு தெரியாமல் நாங்கள் பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. எனது பிராதிலும், நிருபண வாக்குமூலத்திலும் தாவா சொத்து எனக்கு ஒதுக்கப்பட்டு, எனது சகோதரர் உலகன் கைவசம் இருந்து வந்தது என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.

2. எனக்கு ஒதுக்கப்பட்ட தாவா சொத்தில் எனது சகோதரர் உலகன் கூரை வீடு அமைத்து குடியிருந்து வந்தார் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் உலகன் குடியிருந்து வந்ததாக கூறுவதால், உலகனுக்கு என்று தனியாக சொத்து எதுவும் பாகம் ஒதுக்கப்படவில்லை என்றால் சரியல்ல, அவருக்கும் தனியாக பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது. உலகனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தினை அபகரிக்கும் நோக்கில் இந்த வழக்கினை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உலகன், மேலூர் வட்டாட்சியரிடம் தாவா சொத்தினை எனக்கு பட்டா கொடுக்க ஆட்சேபணை இல்லை என மனு கொடுத்தன் பேரில் தாவா சொத்திற்கு எனது பெயரில் பட்டா வழங்கப்பட்டதாக நான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். ஆனால் வா.சா.ஆ-14 ஆவணத்தில் எனது சகோதரர் உலகன் வட்டாட்சியரிடம் தாவா சொத்தில் நான் வீடு கட்டி குடியிருந்து வருவதாகவும், அதில் நான் மின் இணைப்பு பெற்றுள்ளதாகவும், தாவா சொத்திற்கு எனது பெயரில் பட்டா கொடுப்பதில் உலகனுக்கு ஆட்சேபணை எதுவும் இல்லை எனவும் மனு கொடுத்துள்ளதாக காணப்படுகிறது என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ-14ல் கண்டுள்ள சங்கதி பிராது சங்கதிக்கு முற்றிலும் முரண்பட்டு காணப்படுகிறது என்றால் சரியல்ல. மேற்படி உலகனுக்கு, பாரதிதாசன் என்பவர் சுவீகார மகனாக தத்தெடுத்து வளர்க்கப்பட்டு, அவரை இந்த நீதிமன்றத்தில் சுவீகார மகனாக அங்கீகரித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. உலகன் என்பவர் 2ம் பிரதிவாதியை சுவீகாரம் எடுத்த

போது க.உலகன் என கையொப்பம் இட்டுள்ளதாலும், வா.சா.ஆ-14 ஆவணத்தில் வட்டாட்சியருக்கு அளித்ததாக சொல்லப்படும் மனுவில் K.உலகன் என கையொப்பம் இட்டுள்ளதாலும், வா.சா.ஆ-14 ஆவணம் மோசடியாக இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. மேலூர் வட்டாட்சியரிடம் வா.சா.ஆ-14 ஆவணத்தில் கண்டுள்ள பட்டா கோரி ஜமாபந்தி மனு கொடுத்த போது கிரைய பத்திர நகல் இணைப்பு என காட்டியுள்ளதால் அவ்வாறான கிரைய ஆவணம் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ-14ல் கண்ட ஆவணங்கள் அனைத்தும் வருவாய் துறையில் எனது செல்வாக்கினை பயன்படுத்தி என்னால் உருவாக்கப்பட்ட ஆவணங்கள் என்றாலும், உலகன் நான் கூறுவதுபோல் எந்த மனுவும் வட்டாட்சியருக்கு கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ-14 அடிப்படையில் நான் மோசடியாக 2009ம் ஆண்டு பட்டா பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

4. நான் தாவாசொத்தில் எப்போது வீடு கட்டினேன் என்றால் பாகம் ஒதுக்கிய பின்பு 1980ம் ஆண்டுகளுக்கு பின்னிட்டு வீடு கட்டினேன், எந்த ஆண்டு என்று குறிப்பிட்டு எனக்கு ஞாபகம் இல்லை. நான் தாவா சொத்தில் 1980ம் ஆண்டுகளில் வீடு கட்டியதாக சொல்வது பொய்யான சங்கதி என்றால் சரியல்ல. எனது நிருபண வாக்குமூலத்தில் 3வது பத்தியில் தாவா சொத்தில் நான் பட்டா பெற்ற உடன் சென்ட்ரிங் வீடு கட்டி என் கைவசம் வைத்து அனுபவித்து வருவதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு என்றால் 1980ம் ஆண்டுகளில் நான் வீடு கட்டியதாக சொல்வது முற்றிலும் பொய்யான சங்கதி என்றால் எனக்கு வீடு கட்டிய விவரம் சரியாக நினைவில்லை. நான் சரியான நினைவில்லை என்று இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம்அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ-2 முதல் வா.சா.ஆ-7 வரையான ரசிதுகள் தாவா சொத்திற்கான ரசிது அல்ல என்றாலும், தாவாசொத்தின் சர்வே எண் எதுவும்காட்டப்படவில்லை என்றாலும் வேறு சொத்திற்கான ரசிதினை நான் தாக்கல் செய்து, பொய்யான சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

5.அதே போல் வா.சா.ஆ-8 தண்ணீர் ரசிது வா.சா.ஆ-9 மின் கட்டண ரசிதுகள் ஆகியவை தாவா சொத்திற்கான ரசிதுகள் அல்ல என்றாலும், வேறு சொத்திற்கான ரசிதுகளை தாக்கல்செய்து நான் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ-8 ஆவணம் எனது பிராதிலோ, கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்தவதற்கான மனுவிலோ குறிப்பிடாத ஆவணத்தினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆரம்பத்தில் இந்த தாவா நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்ல்ல செய்யப்பட்டது என்றால் சரிதான், அதன்பின்பு விளம்புகை பரிகாரம் கேட்டு திருத்தம் செய்யப்பட்டது என்றால் சரிதான். தாவாசொத்து எனது அனுபவத்தில் ஒருபோதும் இருந்ததில்லை என்றாலும், ஆகையால் நான் கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றாலும் ச ரியல்ல. தாவாசொத்திற்கான எனது உரிமை மூலத்தினை நிருபிக்கும் வகையில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யாத பட்சத்தில் நான் கோரும் விளம்புகை பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

6. சர்வேயர் அளவீடு செய்து எனது இடத்தினை கண்டு எடுத்து கொடுத்துள்ளார். வருவாய் துறை அதிகாரி கூறுவதை மட்டும் வைத்துக்கொண்டு தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை

பரிகாரம் கோருகிறேன் என்றால் சரியல்ல. என் பெயருக்கு பட்டா உள்ளது, நான் முறையாக அளவிடு செய்து தாவா சொத்தில் முறையாக குடியிருந்து வருகிறேன். எனது சகோதரர் உலகனுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை அவர் எழுதிக்கொடுக்காமல் எனது செல்வாக்கினை பயன்படுத்தி வருவாய் துறையில் ஆவணங்களை உற்பத்தி செய்து அதன் அடிப்படையில் நான் தாவா சொத்தில் விளம்புகை கோருவதால் நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் வாய்க்கரலாக பாகம் பிரித்துக்கொண்டிருந்தால் யார் யாருக்கு எந்தவித சொத்து ஒதுக்கப்பட்டிருந்தது என்பதனை எனது பிராதில் கூறியிருப்பேன் என்றாலும், அவ்வாறு எந்த சங்கதியும் எனது பிராதில் கூறாததால் தாவா சொத்து எனது பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்று இந்த வழக்கிற்காக நான் பொய்யுரைக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் கோரும் பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றாலும், தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.